**ஆணையாளர், ஆவடி மாநகராட்சி அவர்களின் செயல்முறைகள்**

**முன்னிலை :- திரு.ச.கந்தசாமி, இ.ஆ.ப**

**ந.க.எண்: 6964/2024/எப்1** **நாள் : 01 .10.2024**

**பொருள்:** ஆவடி மாநகராட்சி – திருமுல்லைவாயல் கிராமம் – பழைய சர்வே எண்: 680/2 Part, நகரளவு எண்:3/8, வார்டு – D, பிளாக் எண்: 40 இல், 2096 சதுர மீட்டர் இடத்தில் 17 மனைகளுக்கு, உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தால் தொழில்நுட்ப அங்கீகாரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது (PPD/L.O.No : 149/2024) – மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – சம்மந்தமாக.

**பார்வை:**

1. உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதம், எண்: Layout–1/0360/2023, நாள்: 11.07.2024.
2. ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திரம் எண்: 5027/2024, தேதி: 10.04.2024.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 28, அவர்களின் சுற்றறிக்கை கடிதம், ந.க.எண்: 12843/2022/டிபி – 2, நாள்: 20.10.2022.
4. மாநகராட்சி பொறியாளர், ஆவடி மாநகராட்சி அவர்களின் குறிப்பு நாள்: 20.09.2024.
5. ஆவடி மாநகராட்சி மாமன்ற தீர்மாணம் எண்:2175, நாள்: 27.09.2024

*********

**உத்தரவு :-**

ஆவடி மாநகராட்சி, மண்டலம் – 2, திருமுல்லைவாயல் கிராமம், பழைய சர்வே எண்: 680/2 Part, நகரளவு எண்:3/8, வார்டு – D, பிளாக் எண்: 40 இல், 2096 சதுர மீட்டர் நிலப்பரப்பு இடத்தில் 17 மனைகள் கொண்ட மனைப்பிரிவிற்கு Tmt. Margaret, GPA on Behalf of Ramani என்பவர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்திற்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு, பார்வை – 1 இல் காணும் உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், சென்னை அவர்களின் 11.07.2024 ஆம் தேதிய கடிதத்தில் மனைப்பிரிவிற்கு PPD/L.O.No : 149/2024 மற்றும் திட்ட அனுமதி எண்: 15866 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள சாலை மற்றும் பொது பயன்பாட்டிற்கான இடத்தினை பார்வை – 2 இல் கண்டுள்ளப்படி, ஆவடி சார்பதிவாளர் அலுவலகத்தில் Tmt. Margaret, GPA on Behalf of Ramani அவர்களால், ஆணையாளர் ஆவடி மாநகராட்சிக்கு தானமாக பதிவு செய்யப்பட்ட தானப்பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பார்வை – 3 இல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் சுற்றறிக்கையின் படி மனுதாரரால் உத்தேச மனைப்பிரிவிற்கு அடிப்படை கட்டமைப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மழைநீர் வடிகால் மற்றும் குடிநீர் குழாய் அமைத்தல் ஆகியவற்றிக்கு மட்டும் பார்வை – 4 இல் கண்டுள்ள குறிப்பின் படி Tmt. Margaret, GPA on Behalf of Ramani அவர்களால், ஆவடி மாநகராட்சியின் கருவூலத்தில் செலுத்திய தொகை ரூ.11,35,000/– இரசீது எண்: 012/06/3/24–25/0001503, நாள்: 26.09.2024, மற்றும் ரூ.1,00,000/–இரசீது எண்: 012/06/3/24–25/0001504, நாள்: 26.09.2024 இல் செலுத்தப்பட்டுள்ளது.

பார்வை – 5 இல் கண்டுள்ள ஆவடி மாநகராட்சி மாமன்ற தீர்மானம் எண்: 2175, நாள்: 27.09.2024 – இல் மேற்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க ஒப்புதல் வழங்கியுள்ளது.

மேற்படி மனைப்பிரிவு உரிமையாளர் / மனுதாரர் குடியிருப்பு மனைப்பிரிவு மட்டும் அமைத்துக்கொள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இத்துடன் இணைத்துள்ள வரைபடத்திற்கு மனைப்பிரிவு அனுமதியளித்து உத்தரவிடப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்:**

1. மனுதாரரால் ஏற்படுத்தப்பட்ட சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவீத மனைகள் அபிவிருத்தி அடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு மனைப்பிரிவு விண்ணப்பதாரர் / மனைப்பிரிவு உரிமையாளரை சாரும்.
2. மேற்கண்ட மனைப்பிரிவு உள்ள பொது சாலைகள் மற்றும் பொது ஒதுக்கீடு இடங்களை வருவாய் / நகரளவை ஆவணங்களின் உரிய உட்பிரிவு செய்யும் பணியினை மனைப்பிரிவு உரிமையாளர்/ மனுதாரர் செய்து மாநகராட்சிக்கு உரிய நேரத்தில் ஒப்படைப்பு செய்ய வேண்டும்.

**ஆணையாளர்**
**ஆவடி மாநகராட்சி**

1/10/24.

**பெறுநர்:**

Tmt. Margaret, GPA on Behalf of Ramani,
Thirunarayanan,
No.23, 2nd street, Vedharajapuram,
Pattabiram, Chennai – 600 072.

**நகல்:**

உறுப்பினர் செயலர்,
சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்,
எண் : 1, தாளமுத்து நடராஜன் மாளிகை,
காந்தி இர்வின் சாலை, எழும்பூர், சென்னை – 600 008.